

# வங்கிச் சேவைகள்

## VISA டெபிட் அட்டை

| | |
|---|---|
| அமானா VISA டெபிட் அட்டை பற்றி | *அமானா வங்கி VISA டெபிட் அட்டையினூடாக உங்களுக்கு உங்களின் கணக்கை LankaPay வலையமைப்பினூடாக நாடு முழுவதையும் சேர்ந்த 3800+ ATMகளினூடாக அணுகும் வசதி வழங்கப்படுவதுடன், 200 க்கும் மேற்பட்ட நாடுகளின் 2 மில்லியனுக்கும் அதிகமான VISA செயற்படுத்தப்பட்ட ATMகளினூடாக அணுகும் வசதியும் கிடைக்கிறது. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுப்பனவுகளுக்காக உலகளாவிய ரீதியில் மில்லியன் கணக்கான விற்பனை நிலையங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எமது எந்தவொரு கிளையிலும் நீங்கள் உங்களின் VISA டெபிட் அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும்.*   |

| | |
|---|---|
| | <br>• நாளொன்றுக்கான ATM மீளப்பெறல் வரையறை: ரூ. 200,000/-.<br>• நாளொன்றுக்கான POS கொள்வனவு பரிவர்த்தனை வரையறை: ரூ. 250,000/-<br>டெபிட் அட்டை கட்டணங்கள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு இங்கே பார்க்கவும் |
| உங்கள் டெபிட் அட்டை பயன்பாட்டுக்கான சிறந்த பழக்க முறைகள் | • அமானா வங்கி VISA டெபிட் அட்டை இஸ்லாமிய வங்கியியல் கொள்கைகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் தவிர்க்கப்பட்டுள்ள பரிவர்த்தனைகளுக்காக பயன்படுத்தக்கூடாது.<br>• உங்களின் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை (PIN) பயன்படுத்தி எந்தவொரு VISA செயற்படுத்தப்பட்ட ATM இலும் அல்லது எமது கார்ட் சென்ரர் ஹொட்லைன் இலக்கமான 0117 756 777 உடன் தொடர்பு கொண்டு உங்களின் டெபிட் அட்டையை செயற்படுத்திக் கொள்ள முடியும்.<br>• உங்களின் முதலாவது பயன்படுத்தலின் போது, உங்களின் PIN இலக்கத்தை ஏதேனும் 4-இலக்கங்களை கொண்ட இரகசிய இலக்கமாக மாற்றிக் கொள்ளுமாறு நாம் உறுதியாக பரிந்துரைக்கிறோம்.<br>• உங்களின் டெபிட் அட்டை தொலைந்தால் அல்லது களவாடப்பட்டால், எமது கார்ட் சென்ரர் ஹொட்லைன் இலக்கமான 0117 756 777 இற்கு உடனடியாக அறிவித்து, அட்டையை செயல்நிறுத்தி (block), ஏதேனும் மோசடி பயன்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள்.<br>• உங்கள் அட்டையை வெளிநாட்டில் பயன்படுத்துவதற்கு, உங்களின் பிரயாணத்திற்கு முன்னதாக எமது கார்ட் சென்ரருக்கு அறிவிப்பதுடன், திரும்பி வந்தவுடன் மீண்டும் அறிவித்து அந்த வசதியை செயல்நிறுத்திக் கொள்ளுங்கள்.<br>• ஒன்லைன் கொடுப்பனவுகள் மற்றும் உங்களின் பரிவர்த்தனை எல்லைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு உங்களின் கிளைக்கு விஜயம் செய்யுங்கள். |
| ஊக்குவிப்புகள் மற்றும் சலுகைகள் | தற்போதைய கட்டணங்கள் மற்றும் கூலிகள் பற்றிய தகவல்களை எமது இணையத்தளத்தில் பார்க்கலாம்: https://www.amanabank.lk/tariff-services.html |

| | |
|---|---|
| பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | • விற்பனை நிலையங்களினால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் தொடர்பில் அமானா வங்கி பொறுப்பாகாது.<br>• அமானா வங்கி அட்டைதாரர்களுக்கு மாத்திரம் சகல சலுகைகளும் வழங்கப்படும்.<br>• விற்பனை நிலையத்தினால் வழங்கப்பட்ட பொருட்களுக்காக செலுத்தப்பட்ட அசல் தொகையின் மீது சலுகைகள் பொருந்தும் என்பதுடன், அன்பளிப்பு வவுச்சர்கள் மற்றும் ஏற்கனவே விலைக்கழிவுகளுடன் காணப்படும் பொருட்களுக்கு விசேட சலுகை பொருந்தாது.<br>• பணத்திற்காக அல்லது விற்பனை நிலையத்தினால் வழங்கப்படும் இதர ஊக்குவிப்புத் திட்டங்களுக்காக இந்த சலுகையை மாற்றிக் கொள்ள முடியாது.<br>• சலுகைத் திட்டத்தை மீளப் பெறுவது அல்லது குறித்த சலுகையுடன் தொடர்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அமானா வங்கி உரிமத்தைக் கொண்டுள்ளதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஊக்குவிப்பு காலப்பகுதியை நீடிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு மற்றும்/அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீளப்பெற அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தையும் கொண்டுள்ளது.<br>• பொது டெபிட் அட்டை நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்ந்தும் பொருந்தும்.<br>• சலுகைத் திட்டம் சம்பந்தப்பட்ட சேவை நிலையங்கள் மற்றும் அமானா வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.<br>• இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் எழுந்தால், சம்பந்தப்பட்ட சேவை நிலையம் அல்லது அமானா வங்கியின் தீர்மானம் இறுதியானதாகும். |
| ஒன்லைன் பரிவர்த்தனை வசதிக்காக பதிவு செய்தல் | உங்களின் ஒன்லைன் வங்கிக் கணக்கினூடாக தகவல் ஒன்றை அனுப்பி உங்களின் அட்டையின் ஒன்லைன் பரிவர்த்தனை வசதியை செயற்படுத்திக் கொள்ளவும். மேலதிக தகவல்களுக்கு பார்வையிடவும்: How To Message To Bank<br>அல்லது<br>1. இணைக்கப்பட்டுள்ள கடித மாதிரிக்கமைய கோரிக்கையை சமர்ப்பிக்கவும் ○ கோரிக்கை கடித மாதிரியை **DOWNLOAD** செய்ய இங்கே அழுத்தவும்.<br>2. சம்பந்தப்பட்ட தகவல்களை பயன்படுத்தி கடிதத்தை மாற்றியமைக்கவும். ○ (சரியான மற்றும் முழுமையான தகவல்களை வழங்குவதனூடாக செயன்முறையை துரிதப்படுத்த உதவியாக அமையும்) ○ அச்சிடப்பட்ட மற்றும் கையால் எழுதப்பட்ட கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். |

| | |
|---|---|
| | 3. மேற்படி கடிதத்தை கையொப்பமிட்டு வங்கிக்கு அனுப்பி வைப்பதனூடாக, நீங்கள் பின்வருவனவற்றை வாசித்து புரிதலைக் கொண்டுள்ளீர்கள் என கருதப்படும், ○ Email கைதுறப்பு விதிமுறைகள் **Click HERE**, ○ புதுப்பிக்கப்பட்ட பொது வங்கியியல் நிபந்தனைகள் **Click HERE** ○ ஒன்லைன் பரிவர்த்தனை இணைத்துக் கொள்ளும் நிபந்தனைகள் **Click HERE** |
| | 4. கோரிக்கை கடிதத்தின் புகைப்படம் அல்லது ஸ்கான் செய்த பிரதியை **ebankingcentre@amana.lk** எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும் *ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கு, அழைக்கவும் 011 7 756 756* |
| டெபிட் அட்டைக்கு விண்ணப்பித்தல் | 1. இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய கோரிக்கை கடிதத்தை சமர்ப்பிக்கவும் ○ கோரிக்கை கடித மாதிரியை **DOWNLOAD** செய்ய இங்கே அழுத்தவும்.<br>2. சம்பந்தப்பட்ட தகவல்களை பயன்படுத்தி கோரிக்கை கடிதத்தை மாற்றியமைக்கவும். ○ (சரியான மற்றும் முழுமையான தகவல்களை வழங்குவதனூடாக செயன்முறையை துரிதப்படுத்த உதவியாக அமையும்) ○ அச்சிடப்பட்ட கடிதங்கள் மட்டுமே ஏற்றக் கொள்ளப்படும்<br>3. மேற்படி கடிதத்தை கையொப்பமிட்டு வங்கிக்கு அனுப்பி வைப்பதனூடாக, நீங்கள் பின்வருவனவற்றை வாசித்து புரிதலைக் கொண்டுள்ளீர்கள் என கருதப்படும், ○ Email கைதுறப்பு விதிமுறைகள் ***Click HERE***, ○ புதுப்பிக்கப்பட்ட பொது வங்கியியல் நிபந்தனைகள் ***Click HERE*** ○ ஒன்லைன் பரிவர்த்தனை இணைத்துக் கொள்ளும் நிபந்தனைகள் ***Click HERE***<br>கோரிக்கை கடிதத்தின் புகைப்படம் அல்லது ஸ்கான் செய்த பிரதியை ***ebankingcentre@amana.lk*** எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும் *ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கு, அழைக்கவும் 011 7 756 756* |
| கருத்தளிப்புகள் மற்றும் முறைப்பாடுகள் | எமது வாடிக்கையாளர் தீர்வுகள் நிலையத்துடன் 24x7 நேரமும் நீங்கள் தொடர்பு கொண்டு, உங்கள் கருத்துகளையும், முறைப்பாடுகளையும் மேற்கொள்ளலாம். உங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக எமது அணியினர் தயாராக இருப்பார்கள்.<br>வாடிக்கையாளர் தீர்வு நிலைய இலக்கம் :+94 11 7 756 756<br>மின்னஞ்சல் : info@amana.lk \| feedback@amana.lk<br>எமது இணையத்தளத்தில் உங்களின் விசாரணைகளை சமர்ப்பிப்பதற்கு www.amanabank.lk<br><br>எவ்வாறாயினும், உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், பின்வரும் முகவரிக்கு தபால் மூலமாக அல்லது மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளலாம்:<br>The Manager - Service Quality Assurance<br>Amana Bank,<br>No. 486, Galle Road, Colombo 03<br>அல்லது e-mail<br>servicequality@amana.lk |

| | |
|---|---|
| | அதன் பின்னரும் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், சுயாதீன நிதி குறைகேள் அதிகாரியின் சேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். நிதிசார் குறைகேள் அதிகாரியின் பின்வரும் அலுவலகத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.<br>Financial Ombudsman,<br>No.1, Bethesda Place, Milagiriya, Colombo 04.<br>Telephone: + 94 11 2595624 Fax: +94 11 2595625 |